

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று (09.09.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், அ.தி.மு.க.வைச் சேர்ந்த கிருஷ்ணகிரி எஸ்.கே.நவாப், கிருஷ்ணகிரி நகர்மன்ற முன்னாள் தலைவர் திருமதி பரிதா நவாப், வட்டச் செயலாளர் அமீர்ஜிகில், வழக்கறிஞர் பர்ஹாகவல் ஆகியோர் தி.மு.கவில் இணைந்தனர். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தே.மதியழகன், மாநில விவசாய அணி துணைச் செயலாளர் டேம் டி.வெங்கடேசன் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (09.09.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் பச்சையப்பன் அறக்கட்டளையில், தி.மு.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எஸ்.பரமசிவம், காட்டூர் கோ.சம்பத், எஸ்.சுரேஷ் ஆகிய அறக்கட்டளை உறுப்பினர்கள் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு, துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா, எம்.பி., அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, மாநில தகவல் தொழில்நுட்ப துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஆகியோர் உடனிருந்தனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று, புதுச்சேரி மாநிலம் தட்டாஞ்சாவடி சட்டப்பேரவை தொகுதி இடைத் தேர்தலில் கழக வேட்பாளராக அறிவிக்கப்பட்ட சேது (எ) சேது செல்வம் நேரில் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். அதுபோது புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர் இரா.சிவா, புதுச்சேரி மாநில சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஏ.எம்.எச்.நாஜிம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### ஆட்சித் தோல்வியை மறைக்க கொச்சைப் பேச்சா? விஜயின் தரம் தாழ்ந்த பேச்சைக் கண்டித்து

# திருவள்ளூரில் 12ஆம் தேதி ஒருங்கிணைந்த திருவள்ளூர் மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

### மாவட்டச் செயலாளர்கள் ஆவடி சா.மு.நாசர் – திருத்தணி எஸ்.சந்திரன் – வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கூட்டறிக்கை







திருவள்ளூர்: செப் 10; ஆட்சியின் தோல்விகளுக்கும், மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் பதில் சொல்ல முடியாமல், அவற்றைத் திசைதிருப்பும் நோக்கில் கொச்சையான பேச்சுகளை முதலமைச்சர் விஜய் பேசி வருவதாக தி.மு.க. கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள், அரசின் நிர்வாகத் தோல்விகள், சட்டம்-ஒழுங்கு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களுக்கு உரிய விளக்கம் அளிக்க வேண்டிய பொறுப்பில் இருக்கும் முதலமைச்சர், அவற்றுக்குப் பதிலளிப்பதைத் தவிர்த்து தரம் தாழ்ந்த அரசியல் பேச்சுகளை முன்வைப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என தி.மு.க. சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“ஆட்சியின் தோல்விகளுக்கு பதில் சொல்ல முடியாமல் தப்பித்துக் கொள்ள, கொச்சையான பேச்சுகளைப் பேசும் தரமற்ற மனிதராக முதலமைச்சர் விஜய் மாறியிருக்கிறார்” எனக் கண்டனம் தெரிவித்துள்ள தி.மு.க. தலைமைக்கழகம், அவரது பேச்சைக் கண்டித்து தமிழகம் முழுவதும் வருவாய் மாவட்டத் தலைநகரங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்த அறிவுறுத்தியுள்ளது. அதன்படி, வருகிற 12.09.2026 சனிக்கிழமை காலை 10 மணியளவில் திருவள்ளூர் மருத்துவ கல்லூரி சாலை டோல்கேட் திருவள்ளூர் மத்திய, மேற்கு மற்றும் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் தலைமை வகிக்கிறார். திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இதில் கழக கொள்கை பரப்பு செயலாளரும் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான வி.ஜி.ராஜேந்திரன், ஆ.கிருஷ்ணசாமி, டி.ஜெ. கோவிந்தராஜன் பங்கேற்கிறார்கள்

எனவே திருவள்ளூர் மத்திய, மேற்கு மற்றும் கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் பகுதி கழகச் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், இந்நாள் மற்றும் முன்னாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டும்.

முதலமைச்சர் விஜயின் தரம் தாழ்ந்த பேச்சுக்கு எதிராகவும், ஆட்சியின் தோல்விகளை மறைக்க மேற்கொள்ளப்படும் அரசியல் திசைதிருப்பல் முயற்சிகளுக்கு எதிராகவும், இந்த ஆர்ப்பாட்டத்தில் வலுவான கண்டனக் குரலை எழுப்ப வேண்டும்.

கழகத் தோழர்கள் ஆயிரக்கணக்கில் அணிதிரண்டு, கண்டன முழக்கங்களை எழுப்பி, மக்கள் விரோதப் போக்கிற்கு எதிரான தி.மு.க.வின் ஜனநாயகக் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும்.

திருவள்ளூர் மத்திய, மேற்கு, கிழக்கு மாவட்டங்களிலிருந்து கழக நிர்வாகிகளும், தொண்டர்களும் பெருந்திரளாகப் பங்கேற்று, இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை எழுச்சியுடன் வெற்றிபெறச் செய்ய வேண்டும். இவ்வாறு திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர், திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் ஆகியோர் கூட்டறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளனர்.

### காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நாளை மறுநாள் 12–ம் தேதி அன்று

# சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் அடாவடி - ஆணவப் பேச்சைக் கண்டித்து செங்கல்பட்டில் கண்டன ஆர்ப்பாட்டம்!

### டி.ஆர்.பாலு எம்.பி. கண்டன உரை! தா.மோ.அன்பரசன் வேண்டுகோள்!



காஞ்சிபுரம், செப்.10- காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் சட்டமன்றத்தில் முதல்வர் விஜயின் அடாவடி - ஆணவப் பேச்சைக் கண்டித்து நாளை மறுநாள் 12-ஆம் தேதி செங்கல்பட்டில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது என்றும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாவட்டம் முழுவதிலும் இருந்து கழகத்தினர் திரண்டு வந்து பங்கேற்கும் படி மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் தா.மோ.அன்பரசன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் மிகவும் அருவெறுக்கத்தக்க வகையில் சட்டமன்ற மாண்புகளை மீறி, மறைந்த தலைவர்களை களங்கப்படுத்தும் வகையில் பேசிய முதல்வர் விஜயின் அடாவடி - ஆணவப் பேச்சைக் கண்டித்து நாளை மறுநாள் 12-ஆம் தேதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் செங்கல்பட்டு, பழைய பேருந்து நிலையம் அருகில் எனது (தா.மோ.அன்பரசன்) தலைமையிலும், மாவட்டக் கழக அவைத் தலைவர் த.துரைசாமி, மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் - முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ. கருணாநிதி, வரலட்சுமி மதுசூதனன், து.மூர்த்தி மற்றும் மாவட்டப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து கழகப் பொருளாளர் - கழக மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு கண்டன உரையாற்றுகிறார்.

கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக தீர்மானக்குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், தாம்பரம் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், வி.என்.பி.வெங்கட்ராமன், மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ்,

தலைமைசெயற்குழு உறுப்பினர்கள் ஜி.சி.அன்புச்செழியன், க.அன்புச்செல்வன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் பி.டி.சி. ஜி.செல்வராஜ், இரா. பொன்னுராம், ஆதிமாறன், அ.தமிழ்மாறன், என்.நவீன், சாய்ஜெய்காந்த் பாரதி, ஆர்.எஸ்.கிருத்திகா தேவி, ஒன்றியச் செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந. கோபால்,பையனூர் எம். சேகர், ஏ.வந்தேமாதரம், ஆப்பூர் பி.சந்தானம்,ஜி. கே.ரவி, எம்.டி.லோகநாதன், திருமுடிவாக்கம் இ. மணி, கே.பி.ராஜன்,நகரச் செயலாளர்கள்ஜெ.சண்முகம், எஸ்.நரேந்திரன், டி. பாபு, எஸ்.ஜபருல்லா, கோ. சத்தியமூர்த்தி, எம்.கே.டி. கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

பகுதி கழகச்செயலாளர்கள் என்.சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ. ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயக்குமார், பெருங்களத்தூர்எஸ்.சேகர், எஸ்.இந்திரன், டி.காமராஜ், மாடம்பாக்கம் ஆ.நடராஜன், ஏ. கே.கருணாகரன், இரா. சுரேஷ், இ.எஸ்.பெர்னாட்,

தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ். கே.இப்பிராகிம், ஆர். டி.பூபாலன், எம்.ஆர்.சீனிவாசன், ஆர்.எஸ்.சங்கர்,க. தேவேந்திரன், எஸ்.சதீஷ், கே.எத்திராஜ், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு,சே. அருள்தேவி,இரா.பாஸ்கரன்,மு.ரஞ்சன்,ஜி ஜேந்திரன் ராமு மற்றும் எம். கஜனா (எ) கஜேந்திரன், துரை சண்முக மணிகண்டன், மனோகரி சண்முகம் உள்ளிட்ட கழகத்தினர் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்.

தொடக்கத்தில் செங்கல்பட்டு நகரச் செயலாளர் எஸ்.நரேந்திரன் அனைவரையும் வரவேற்று பேசுகிறார்.

முடிவில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

12ஆம் தேதி செங்கல்பட்டில் நடைபெறும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வது ‘நமது உரிமை’‘நமது கடமை’ என்ற லட்சிய உணர்வோடு காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒட்டு மொத்த கழகத்தினரும் ஆயிரக்கணக்கில் அலைகடலென திரண்டு வந்து பங்கேற்க வேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.





சென்னை கிழக்கு மாவட்ட எழும்பூர் தொகுதி பகுதி வட்டம் மறுசீரமைப்பு தொடர்பான நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் சென்னை சூளை உமா சுவராஜ் மகாலில் 09.09.2026 புதன்கிழமை காலை 10 மணி அளவில் நடைபெற்றது. கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்ட கழக செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. பகுதி வட்டம் மறு சீரமைப்பு பற்றி எடுத்துக் கூறி ஆலோசனைகள் வழங்கினார் இக்கூட்டத்தில் பகுதி செயலாளர்கள் சொ.வேலு,வி.சுதாகர்,கே எஸ் ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, கே எஸ் எம் நாதன், புனிதவதி எதிராஜன், கோ மணி,அ.நிர்மலாதேவி, க.நந்தீஸ்வரன், ராஜேஸ்வரி ஸ்ரீதர் ஜி தாமோதரன் தி.தயாளன்,வி.அபாய்,சு.மனோகர்,ந.பாலு,சி.சேகர்,ஆர்.எம். ரங்கநாதன்,வி. விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ்.அரிகிருஷ்ணன்,எல்.சுந்தர்ராஜன், வான்மதி கதிரவன் மற்றும் மாவட்ட பள்ளிகள் செயல்வீரர்கள் முன்னோடிகள் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

### அநீதியாளனைவிட, அக்கிரமம், அநீதி என்று அறிந்தே அமைதி காக்கும்

# ‘அறிவாளிகளின்’ மவுனம் கொடூரமானது!

### வி.சி.க. பொதுச்செயலாளர் சிந்தனைச்செல்வன் கண்டனம்!



சென்னை, செப். 10- விசிக பொதுச் செயலாளர், சிந்தனைச் செல்வன் வெளியிட்டுள்ள பதிவில், “அக்கிரமங்களை அரங்கேற்றும் அநீதியாளனை விட, அது அக்கிரமம், அநீதி என்று அறிந்தே அமைதி காக்கும், அறிவாளிகளின் மவுனம் கொடூரமானது என்று கூறியுள்ளார்.

செய்தித் தொடர்பாளர் பாவலன் வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘காலங்கள் கடந்து போன நிலையில் இப்போது சர்க்காரியா ஆணையம் மற்றும் மிசா கொடுமைகள் குறித்தான வாதங்கள் தேவையற்றது.

1976ல் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞரின் மீதான சர்க்காரியா ஆணைய ஊழல் குற்றச்சாட்டு நீதிமன்றத்தில் நிற்கவில்லை. 1980ல் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது. நிலைமை அவ்வாறிருக்கையில் இப்போது ஏன் அதுபற்றிய விவாதங்கள்?

கலைஞர் தமிழ்நாட்டிற்கான இட ஒதுக்கீடு, மாநில உரிமைகள், இந்தி மற்றும் சமஸ்கிருத எதிர்ப்பு, அறிவியல் வளர்ச்சி, ஐ.டி பார்க் உள்ளிட்ட ஏராளமான சாதனைகளையும் நிகழ்த்தியிருக்கிறார். வாழ்நாள் முழுவதும் சனாதன சக்திகளை எதிர்த்து பல்வேறு மாற்றங்களுக்கு காரணமாகவும் இருக்கிறார். அதை நாம் மறக்க கூடாது.

அத்துடன், மிசா சட்டத்தை மிகக் கடுமையாக கலைஞர் எதிர்த்த காரணத்தினால், அன்றைக்கு திமுகவைச் சேர்ந்து பலரும் கைது செய்யப்பட்டார்கள். அந்த வரிசையில்தான் மு.க. ஸ்டாலின் கைது செய்யப்பட்டார். ஆகவே, சர்க்காரியா ஆணையம் மற்றும் மிசா சட்டம் போன்றவைகள் குறித்தான தேவையற்ற விமர்சனங்கள் தவிர்க்கப்பட வேண்டியவையாகும். இப்போதைக்கு தேவை ஆக்கப்பூர்வமான செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதும், ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் நல்ல திட்டங்களை அப்படியே தொடர்வதும் தான் ஒரு நல்ல அரசுக்கு அழகு” என்று கூறியுள்ளார்.

### ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி

# 118 வது வட்டக் கழக நிர்வாகிகள் கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம்!

### வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் அறிவிப்பு!

சென்னை, செப். 10 சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி, 118 வது வட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், 118 வது வட்ட மறு சீரமைப்பு கலந்தாய்வு ஆலோசனைக் கூட்டம் இன்று (10.09.2026 வியாழக்கிழமை) மாலை 6 மணி அளவில், புதுப்பேட்டை, பி.வி. கோயில், 2 வது தெருவில் உள்ள கலைஞர் படிப்பகம் தி.மு.க. கிளைக் கழக மன்றத்தில் நடைபெறுகிறது.

தலைமை கழகம் அறிவுறுத்தலின் படி, சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதியில் நடைபெற்ற ஆயிரம் விளக்கு சட்டமன்றத் தொகுதி மறு சீரமைப்பு செய்வதை முன்னிட்டு மேற்கண்ட கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவை சென்னை மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் நே. சிற்றரசு, ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை ஆகியோரும், 118 வது வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் கூட்டத்தில் நாம் எடுக்கும் மறு சீரமைப்பு எவ்வாறு அமைய வேண்டும் என்பதை விளக்கமாக கூற இருப்பதால் மேற்கண்ட கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களுடைய கருத்துக்களை தெரிவிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு 118 வது வட்டக் கழகச் செயலாளர் கோ.யுவராஜ் தெரிவித்துள்ளார்.